சுற்று நிருப இலக்கம் : 01/2018

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு (மே மா)
இலக்கம் : 109, பிரதான வீதி,
பத்தரமுல்ல
2018 03 13

மேல் மாகாணத்தின் அனைத்து பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கிராமிய வங்கிகள், சணச சங்கங்கள், கூட்டுறவுச் சபைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள்/ ஒன்றிய தலைவர்களுக்கும்,

**கூட்டுறவு ஊழியர்களுக்கான 2018 ஆம் ஆண்டின் விடுமுறைகள்**

கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுவின் ஒழுங்கு விதிக் கோவைக்கு ஏற்ப கூட்டுறவு ஊழியர்களுக்கு உரித்துடைய பொது விடுமுறையான கடை மற்றும் அலுவலக ஊழியர்கள் சட்டத்தின் கீழ் கௌரவ தொழில் அமைச்சர் அவர்களினால் பிரகடனம் செய்யப்பட்ட தினங்களாகும் இதற்கேற்ப கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள தினங்கள் கூட்டுறவு ஊழியர்களுக்கான விடுமுறை தினங்களாக ஆணைக்குழுவின் நியதிகளுக்கமைய அறிவிக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| 01. | ஜனவரி | - | 14 | தமிழ்த் தைப்பொங்கல் தினம் |
| 02. | பெப்ரவரி | - | 04 | தேசிய சுதந்திர தினம் |
| 03. | ஏப்ரல் | - | 13 | சிங்கள தமிழ் புது வருடத்திற்கு முந்திய நாள் |
| 04. | ஏப்ரல் | - | 14 | சிங்கள தமிழ் புது வருடம் |
| 05. | ஏப்ரல் | - | 30 | வெசக் முழு நோன்மதி தினத்திற்கு பிந்திய நாள் |
| 06. | மே | - | 01 | சர்வதேச தொழிலாளர் தினம் |
| 07. | நவம்பர் | - | 20 | (மீலாதுன்-நபி) நபிகள் நாயகம் பிறந்த தினம் |
| 08. | டிசெம்பர் | - | 25 | நத்தார் தினம் |

02. மேற்குறிப்பிடப்பட்ட தினங்களுக்கு மேலதிகமாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் "கூட்டுறவாளர்களின் தினமாக" பிரகடனம் செய்யப்படும் தினமும், அரசினால் சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு "அரச விடுமுறை" தினங்களாக பிரகடனம் செய்யப்படும் தினங்களும், அனைத்து பௌர்ணமி விடுமுறை தினங்களும் விடுமுறை நாட்களாகக் கருதப்பட்டு விடுமுறை வழங்கப்படல் வேண்டும் இதற்கு மேலாக, தமது ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய தமது ஊழியர்களுக்கு விடுமுறை வழங்குதல் தொடர்பாகத் தீர்மானிக்க முடியும்

03. 2018 ஆம் ஆண்டில் சிங்கள /தமிழ் புத்தாண்டிற்கு முந்திய தினங்கள் விடுமுறை தினங்களாக ஆக்கப் பட்டுள்ளதால் நுகர்வோரின் வசதி கருதி ஏதாவதொரு சங்கம் விரும்பினால் சங்க அலுவலகத்தையோ அல்லது அதன் பகுதிகளையோ இத்தினங்களில் ஒரு தினத்திலோ அல்லது இரு தினங்களிலுமோ திறந்து வைப்பதற்கும், அத்தினங்களில் கடமையாற்றுவதற்கு ஊழியர்களுக்கு அறிவுரை வழங்கவும் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது அவ்வாறு செயற்படுமிடத்து மேற்குறிப்பிட்டவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட ஊழியர்களுக்கு அவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்ட தினங்களின் எண்ணிக்கைக்குச் சமமான தினங்கள் பூரண சம்பளத்துடன் அதன் பின்வரும் 30 நாட்களுக்குள் விடுமுறை வழங்கல் அவசியமாகும் இவ்வாறு ஒரு சங்க அலுவலகம் அல்லது சங்கப் பகுதியொன்று திறந்து வைத்திருக்கும் சந்தர்ப்பங்களில் சேவையில் ஈடுபடுமாறு அனைத்து ஊழியர்களுக்கோ அல்லது ஊழியர்களின் ஒருபகுதியினருக்கோ அறிவுரை வழங்கப்படுமாயின் அவர்கள் தாமதமின்றி அதற்காக ஆணைக் குழுவிற்கு சமூகமளித்தல் அவசியமாகும்

04. மேற்குறிப்பிடப்பட்ட விடுமுறை தினங்களில் ஏதாவதொன்று சங்கத்தினால் வாராந்தம் வழங்கப்படும் 1½ தின விடுமுறையில் உள்ளடங்குமாயின் அதற்குப் பதிலாக தொடரான அரை நாள் அல்லது பூர்த்தியான ஒரு நாள் விடுமுறையாக அடுத்து வரும் 30 நாட்களுக்குள் ஊழியர்களுக்கு விடுமுறையாக வழங்குதல் அவசியமாகும் இதற்கு மாற்றாக, இரு தரப்பினரதும் உடன்பாட்டுடன் அற்குப் பதிலாக அரை நாள் அல்லது ஒரு நாளிற்கான சம்பளம் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் பொருத்தமான கொடுப்பனவு வழங்கப்பட முடியும்

எஸ் ஏ எல் ரங்கனீ
செயலாளர்
கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக் குழு
மேல் மாகாணம்

பிரதிகள்

01. பிரதான செயலாளர் –மேல் மாகாணம்
02. செயலாளர், கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக அமைச்சு –மேல் மாகாணம்
03. கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்க பதிவாளர் –மேல் மாகாணம்
04. பணிப்பாளர், கூட்டுறவு ஊழியர் ஓய்வூதியத் திட்டம் –மேல் மாகாணம்
05. கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் –(கொழும்பு/கம்பஹா/களுத்துறை)
06. செயலாளர், கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழு
07. அனைத்து மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக் குழுச் செயலாளர்கள்
08. அனைத்து கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கங்கள்